## விரிவான குடிநீர் வழங்கல் திட்டம்- புழல், புத்தகரம், சூரப்பட்டு மற்றும் கதிர்வேடு

**முகவுரை:**

சென்னை மாநகரின் விரிவாக்கப் பகுதிகளான புழல், புத்தகரம், சூரப்பட்டு மற்றும் கதிர்வேடு பகுதிகளுக்கு ஒருங்கிணைந்த குடிநீர் திட்டப் பணிகள் ரூ.82.61 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டம் (2013-14)-ன் கீழ் (அரசு ஆணை (எம்.எஸ்).எண். 105, ந.நி.ம.கு.வ (எம்.சி.ஐ) துறை, நாள்: 11.07.2013) எடுத்துக் கொள்ளப்பட்டது. இத்திட்டத்திற்கான ஒப்பந்தம் திருவாளர்கள் அக்வா டிசைன் இந்தியா பிரைவேட் லிமிடேட் அவர்களுக்கு ரூ.59.12 கோடி மதிப்பீட்டில் வழங்கப்பட்டது மற்றும் திட்டத்தின் காலம் 30 மாதங்கள் ஆகும்.

இத்திட்டப்பணிகள் பல்வேறு காரணங்களால் முடிக்கப்படாததால், திருவாளர்கள் அக்வா டிசைன் இந்தியா பிரைவேட் லிமிடேட் அவர்களின் ஒப்பந்தம் 28.11.2018 அன்று ரத்து செய்யப்பட்டது. மீதமுள்ள பணிகளுக்கு மூன்று மதிப்பீடுகளாகப் பிரிக்கப்பட்டு, ஒப்பந்தம் கோரப்பட்டு பணி ஆணை வழங்கப்பட்டது

1. புழல், சூரப்பட்டு, புத்தகரம் மற்றும் கதிர்வேடு பகுதிகளில் அகழி இல்லாத முறையில் விரிவான குடிநீர் வழங்கல் திட்டத்திற்காக 800 மி.மீ, 1000 மி.மீ மற்றும் 1500 மி.மீ விட்டமுள்ள (எம்.எஸ். என்கேசிங்) குழாய்களை பதிக்கும் பணிக்காகவும், 250 மி.மீ, 450 மி.மீ மற்றும் 800 மி.மீ விட்டமுள்ள குழாய்களை NH-5 பைபாஸ் சாலையில் செயினேஜ் 30/140 கி.மீ, 31/454 கி.மீ மற்றும் 13/913 கி.மீ வரை பதிக்கும் பணிக்காகவும் பணி ஆணை ஒப்பந்தம் திருவாளர் ரவி அசோசியேட்ஸ் நிறுவனத்திற்கு ரூ.4.51 கோடி மதிப்பில் 18.01.2019 அன்று வழங்கப்பட்டது.
2. புழல், சூரப்பட்டு, புத்தகரம் மற்றும் கதிர்வேடு பகுதிகளில் விடுபட்ட தெருக்களுக்கு விரிவான குடிநீர் வழங்கல் திட்டத்திற்காக 100 மி.மீ முதல் 800 மி.மீ வரையிலான குழாய்களை பதிக்கும் பணிகளுக்கான பணி ஆணை ஒப்பந்தம் திருவாளர் சுப்பையா கன்ஸ்ட்ரக்சன் கம்பெனி லிமிடெட் நிறுவனத்திற்கு ரூ.7.08 கோடி மதிப்பில் 10.07.2019 அன்று வழங்கப்பட்டது.
3. ஒருங்கிணைந்த புழல் பகுதிக்கு நிலுவையில் உள்ள 50 ல.லி மற்றும் 7 ல.லி வரையிலான குடிநீர் பணிகளுக்காக சிவில் & எலக்ட்ரோ மெக்கானிக்கல் பணிகள், வீட்டு குடிநீர் இணைப்பு பணிகள், குழாய் பதிக்கும் பணிகள், மதகு வால்வுகள் மற்றும் காற்று வால்வுகள் அமைப்பதற்கான பணிகளுக்கான பணி ஆணை ஒப்பந்தம் திருவாளர் என்.ஆர்&கோ நிறுவனத்திற்கு ரூ.7.29 கோடி மதிப்பில் 10.09.2019 அன்று வழங்கப்பட்டது.

**வேலையின் நோக்கம்:**

புழல், புத்தகரம், சூரப்பட்டு மற்றும் கதிர்வேடு ஆகிய பகுதிகளுக்கு விரிவான குடிநீர் வழங்கல் திட்டம் கீழ்க்காணும் திட்ட நோக்கம் உடையது:

1. மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகள் அமைத்தல் - 2 எண்கள்.
2. கீழ்நிலை நீர்தேக்கத் தொட்டிகள் அமைத்தல் - 2 எண்கள்.
3. வீட்டு குடிநீர் இணைப்புகள் - 10, 680 எண்கள்.
4. பகிர்மான குழாய்கள்அமைத்தல் – 165.25 கி. மீ.
5. உந்து குழாய்கள்அமைத்தல் - 8.81 கி.மீ.

**பணிகளின் முன்னேற்ற நிலை:**

பணிகள் முடிக்கப்பட்டு, தற்பொழுது வெள்ளோட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**இத்திட்டத்தை செயல்படுத்தினால், 66,196 மக்கள் பயனடைவார்கள்.**

**<u>புழல்</u>**




சென்னை குடிநீர் வாரியத்தின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள
CHN_Metro_Water CMWSSB chennaimetrowater https://cmwssb.tn.gov.in